8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஆ. பொது விற்பனை வரி (திருத்தம்) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :— தலைவர் அவர்களே, தமிழ்நாடு 981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தம்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :— இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :— இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

இ. பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பட்டா பாஸ் புத்தகம் வழங்கல் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:- இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):— இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

இ. இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1981 (ஆ. இ).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்);– பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி).

ஈ. இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.